**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 426/2024 நாள்- 25.03.2026

**<u>பி.வா.சா.1. புத்தர் என்ற கணக்கர்</u>**

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பில்</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது பிரதிவாதி சேவுகபாண்டியன் என் சகோதரர். 3ம் பிரதிவாதி சேவுகபாண்டியனின் பிள்ளை. 4ம் பிரதிவாதி மற்றொரு சகோதரரின் மகன். எங்கள் மீது 2 வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 2 வழக்குகளிலும் காட்டியுள்ள சொத்துக்களுக்கு மூதாதையர் விழுதுபெருமாள் நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். விழுதுபெருமாள் நாடாருக்கு தான் சொத்து பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.1 , 2 -ல் விழுதுபெருமாள் நாடார் பெயர் இல்லை என்றால் சரிதான் பிள்ளையார் நாடார் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்கிற்கு நான்தான் என் வழக்கறிஞருக்க தகவல் கூறினேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2018 ம் ஆண்டில் சேவுகபாண்டியன் சொத்திற்கு பட்டா கேட்டு விண்ணப்பம் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் இறந்துவிட்டதால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் சகோதரர் இறப்பதற்கு முன்பு எனக்கு வழங்கிய ஆவணங்கள். பி.வா.சா.ஆ.3-ல் வாரிசுரிமையின் படி பட்டா வழங்கக் கோரி என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3-ல் சம்பந்தப்பட்ட வாரிசு சான்றிதழ் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. பட்டா மனு கொடுத்த பின்பு வாதிகளுக்கு எதிராக கேவியட் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். வாதிகளும் எங்களுக்கு எதிராக கேவியட் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் எந்த சொத்தின் சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்று கேட்டால் எனக்கு தெரியாது. விழுதுபெருமாள் நாடார் தாவா சொத்தைப் பொறுத்து எந்த வருடம் ஆவணம் எழுதி வைத்தார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.18 ல் கண்ட விவரங்கள் என்னால் கூற முடியுமா என்று கேட்டால்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

எனக்கு படிக்கத்தெரியாது என்பதால் என்னால் கூறமுடியாது . ஆவணத்தில் உள்ள விவரங்களை என் தம்பி படித்து காண்பித்து நான் கேட்டுள்ளேன். வா.சா.ஆ.18-ல் கண்டுள்ள ஜமீன் சர்வே எண் 116/4a செண்ட் 67 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து நஞ்சை நிலம் என்றால் சரிதான். வாதி எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கேட்கிறார் என்று எனக்கு தெரியாது. 1943 ம் ஆண்டு விழுதுபெருமாள் நாடார் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து வாதி உரிமைகோரவில்லை எனில் அவர்களது வழக்கை பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான் நாங்கள் விழுதுபெருமாள் எழுதிக் கொடுத்த 1943 ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி உரிமை கோருகிறோம். பி.வா.சா.ஆ.1-ல் 5 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1-ல் 67 செண்ட் விஸ்தீரணம் உள்ள இடத்தை தான் நாங்கள் உரிமை கோருகிறோம் மற்ற இடங்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1953 ம் வருடம் பிள்ளையார் நாடார் ஒரு அடமானம் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1957 ம் வருடம் விழுதுபெருமாள் நாடார் மகன் பிள்ளையார் நாடார் மேற்கண்ட அடமானத்தை உட்படுத்தி பஞ்சாங்க நாடாருக்கு அடமான ஆவணத்தில் கண்ட சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அடமான ஆவணத்தில் கண்ட சொத்து கிரையத்திற்கு பிறகு யார் யார் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் கேவியட் மனுவில் சர்வே எண். 71/16 என்று காட்டப்பட்டுள்ள சர்வே எண்ணுக்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் கேவியட் மனுவில் சொத்தின் விஸ்தீரணம் 67 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் பொய் சொல்கிறேன் என்றும் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் கேவியட் மனுவில் 50 செண்ட் என்று தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தபசில் சொத்திற்கான பட்டா வரி ரசீதுகள் பிரதிவாதிகளான எங்கள் பெயரில் இருக்கிறது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1, 2 தவிர தாவா சொத்திற்கான ஆவணங்கள் எங்கள் கைவசம் இல்லை என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றும், எவ்வளவு சொத்து உரிமை உண்டு என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது வாதி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

பெயரில் தான் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கும் எங்கள் மூதாதையருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் மூதாதையர்கள் உரிமை பெற்று அனுபவம் செய்து வந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள தபசில் சொத்துக்கள் விழுதுபெருமாள் நாடார் மகன் பிள்ளையார் நாடாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றும், அதில் விழுதுபெருமாள் நாடாருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1943 ம் ஆண்டில் விழுதுபெருமாள் நாடார் மகன்களின் பேரன்களுக்கு தானமாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் விழுதுபெருமாள் நாடார் மகன் பிள்ளையார் நாடார் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 1943 ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்கள் நஞ்சை நிலங்கள் என்றும், 1957 ம் ஆண்டு கிரைய ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் புஞ்சை நிலங்கள் என்று சொன்னால் சரிதான். 1943 ம் ஆண்டில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 67 செண்டும், 1957 கிரைய ஆவணத்தில் 65 செண்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1957 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து விழுதுபெருமாள் நாடாருக்கு உரிமைஇருப்பதாகவோ, விழுதுபெருமாள் நாடாருக்கு வழிவந்ததாகவோ எவ்வித குறிப்பும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 1957 ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் 4 மால், 1943 ல் தானசெட்டில் ஆவணத்தில் கண்ட மால்கள் ஒத்துப்போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1943 ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்தின் ஜமீன் சர்வே எண். 116/4A என்றும், 1957 ம் வருட கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தின் ஜமீன் சர்வே எண்.14/2B, 13/2B என்றால் சரிதான். 2 ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் வேறு வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்றும், வாதிகள் சொத்தை ஏமாற்றி பறிக்க வேண்டி பலவழிகளில் தொந்தரவு செய்தோம் என்றும் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்ய நேரிட்டது என்றும் தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித அனுபவமும், உரிமையும் கிடையாது என்றும் வாதி தான் சொத்தை உரிமை பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும் எனவே வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து காலிமனையாக தான் உள்ளது கட்டிடம் ஏதும் இல்லை. தாவா சொத்தில் சுகுணா வீடு கட்டி அனுபவம் செய்து

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

**வருகிறார் என்றால் நான் சொத்திற்கு செல்லவில்லை என்பதால் எனக்கு தெரியாது. கென்னடி சொத்தை சுற்றி முள்வேலி அமைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான் கட்டிடம் இல்லை.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.